**மத்துகம பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்துகம பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய காணிகளை ஏலத்தில் விற்பனை செய்யும் போது சபைக்குச் சொந்தமான 98.84 பேர்ச் அளவான ரூபா 3,276,800 பெறுமதியான 02 காணிப் பகுதிகள் காணி கட்டிடப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாமையின் காரணமாக, நிதிகூற்றுக்களில் காணி கட்டிடங்களின் பெறுமதி ரூபா 3,276,800 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய கைத்தொழில் உதவிப் பணம் ரூபா 8,546,998 ஆக இருந்ததுடன் வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 13,389,346 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக கைத்தொழில் உதவிப் பெறுமதி ரூபா 4,842,348 தொகை அதிகரித்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய கைத்தொழில் செலவினம் ரூபா 8,546,998 ஆக இருந்த போதிலும், வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 29,056,134 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் கைத்தொழில் செலவினம் ரூபா 20,509,136 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 இன் கணக்காய்வு அறிக்கையில் 2.2.1(ஈ) பந்தியில் காண்பிக்கப்பட்ட பிழைகளை சரிப்படுத்துவதற்காக தொங்கல் கணக்கு ரூபா 3,482,240 வரவு வைத்து அப்பெறுமானத்தால் திரண்ட நிதியம் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 4,439,581 தொகை தொங்கல் கணக்கிற்கும் திரண்ட நிதியத்திற்கும் முறையே வரவு மற்றும் செலவு வைக்கப்பட்டமையின் காரணமாக தொங்கல் கணக்கின் வரவு மீதியும் திரண்ட நிதியத்தின் செலவு மீதியும் ரூபா 957,341 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 6,976,357 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 6,920,036 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 56,321 இனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான சொத்துக் கணக்கின் மீதி ரூபா 232,526,246 ஆக இருந்ததுடன் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 232,538,836 ஆக இருந்தமையால் அக் கணக்குகளுக்கிடையே ரூபா 12,590 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(எ) மீளாய்வாண்டில் 6 நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய ரூபா 2,870,610 தொகையான மூலதனச் செலவினம், ஓய்வூதியம், ஓய்வூதிய நலன்கள் மற்றும் பணிக் கொடையின் கீழ் மீண்டெழும் செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,240,149 பெறுமதியான இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள், தளபாட உபகரணங்கள் மற்றும் நூலகப் புத்தகங்கள் மூலதனச் செலவின் கீழ் காண்பிக்கப்படாது மீண்டெழும் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் போது எதிர்வரும் வருடங்களுக்காக கிடைத்த ரூபா 61,460 தொகை முற்பணமாகக் கிடைத்த வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பெகோ இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்காக மீளாய்வாண்டிற்குரியதாக செலவிடப்பட்டிருந்த போதும் இதுவரை செலுத்திய ரூபா 50,150 தொகையான செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக வருமானச் செலவினக் கணக்கில் வரவு வைத்து கடன்கொடுத்தோராக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) நிலுவையாக முத்திரைக் கட்டணத்தில் ஆரம்ப மீதியொன்று காணப்படாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரியதாக மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 27,663,773 தொகையான முத்திரைக் கட்டண வருமானம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிலுவை முத்திரைக் கட்டணக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் முத்திரைக் கட்டண வருமானமாக ரூபா 37,500,000 தொகை நிதிக்கூற்றுக்களில் மதிப்பீடு செய்து காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பெறவேண்டிய முத்திரைக் கட்டணமாக ரூபா 5,961,365 தொகை மாத்திரமே காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் படி பெறவேண்டிய முத்திரைக் கட்டணத் தொகை ரூபா 31,538,635 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின் இறுதியில் பொதுக் களஞ்சிய மீதி ரூபா 498,453 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 308,675 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக பொதுக் களஞ்சிய மீதி ரூபா 189,778 தொகை குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர் கடன் மீதி ரூபா 14,671,547 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 12,459,319 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ஊழியர் கடன் மீதி ரூபா 2,212,228 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

05 கணக்கு விடயங்களுக்குரிய கணக்குகளின் பிரகாரம் மீதி ரூபா 232,092,923 ஆக இருந்ததுடன் அவற்றுக்குரிய பட்டோலைகளின் பிரகாரம் மீதி ரூபா 205,980,054 ஆனமையால் ரூபா 26,112,869 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

விரிவான பட்டோலைகள் மற்றும் வைப்புச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கூட்டுமொத்தமாக ரூபா 13,306,920 தொகையான 03 கணக்கு மீதிகளைக் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நீண்ட காலமாக நிலுவை மீதியாக கணக்குகளில் முன்கொண்டுவரப்படுகின்ற வீதி விளக்கு மானியம் ரூபா 358,225 தொகையையும் தனியார் பேரூந்து தரிப்பிட வருமானம் ரூபா 96,000 தொகையையும் அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதியின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல வருடங்களாக முன்கொண்டுவரப்படுகின்ற உள்ளூராட்சி ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 6,920,036 தொகையினைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,075,479 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,549,979 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 12,983,647 நிலுவை வருமானம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 ஆதனவரி

(அ) மீளாய்வாண்டில் ஆதனவரி பட்டியலிடல் ரூபா 4,352,531 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் ரூபா 1,543,250 தொகை அதாவது 36 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை ஆதனவரி மீதியான ரூபா 7,885,300 தொகையில் ரூபா 3,497,543 அதாவது 44.3 சதவீத அளவு அறவிடப்பட்டிருந்ததுடன்

ஆண்டின் இறுதியில் மொத்த நிலுவை ரூபா 5,931,007 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் ஒட்டுமொத்த ஆதனவரி அறவிடலின் முன்னேற்றம் 51.4 சதவீதமாகும்.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனவரி செலுத்துபவர்களில் ரூபா 10,000 இற்கு மேற்பட்ட நிலுவை மீதியைக் காண்பிக்கின்ற ஆதனவரி செலுத்துபவர்கள் 42 ஆகும். அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதி ரூபா 795,822 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 ஏக்கர் வரி

நடப்பாண்டின் போது ஏக்கர் வரியாக ரூபா 42,834 தொகை பட்டியலிடப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 40,106 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 94,486 தொகையான நிலுவை மீதியில் ரூபா 76,864 தொகை மாத்திரம் அறவிடப்பட்டமையால் நடப்பாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டு மொத்த ஏக்கர் வரி நிலுவை மீதி ரூபா 20,350 ஆகும்.

### 2.2.4 வியாபார வரி

(அ) மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வியாபார வரி வருமானம் ரூபா 1,979,008 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் ரூபா 214,041 தொகை அதாவது 11 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவை மீதி ரூபா 151,750 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதியில் ரூபா 53,660 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை ரூபா 267,700 ஆக இருந்தது.

### 2.2.5 வியாபார நிலைய வாடகை

(அ) மீளாய்வாண்டில் வியாபார நிலைய வாடகைக்காக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 2,791,119 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 2,260,503 தொகை அறவிடப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த வியாபார நிலைய வாடகை நிலுவை ரூபா 516,623 ஆகும்.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் முத்திரை வைக்கப்பட்டு மூடப்பட்டள்ள மற்றும் உடைத்து அகற்றப்பட்டுள்ள 12 கடைகளிலிருந்து ரூபா 241,426 தொகையான கடை வாடகை நிலுவையொன்று அறவிடவேண்டியிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 05 மாதங்கள் முதல் 38 மாதங்கள் வரையில் அந்த மீதி நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.6 பெயர்ப்பதாதை மற்றும் விளம்பர அறிவித்தல் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள பெயர்ப் பதாதை / விளம்பர அறிவித்தல்களிலிருந்து ரூபா 872,600 தொகையான கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 24,461,365 தொகை பின்வரும் பிரகாரம் கிடைக்க வேண்டியிருந்தது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 18,500,000 |
| முத்திரைக் கட்டணம் | 5,961,365 |

### 2.2.8 காணி விற்பனை வரி

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணி ஏல விற்பனையின் போது ஏலமிடப்படுகின்ற காணிகளின் விற்பனை விலையில் ஒரு சதவீத வருமானமொன்று சபையினால் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறின்றி சபையின் வருமானக் கட்டுப்பாட்டாளரினால் தயாரிக்கப்பட்ட அண்ணளவான மதிப்பீட்டில் ஒரு சதவீத தொகை பெறப்பட்டிருந்தது.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய போாந்துபிட்டிய அலவத்துகொட எஸ்டேட் (நிவ் சிட்டி) காணியை ஏலமிடும் போது அறவிடப்பட்ட 1 சதவீத வரித்தொகை ரூபா 330,696 குறைத்து அறவிடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) 2010 ஆம் ஆண்டின் போது சிறு கொங்கிரீட் கல் உற்பத்திக்காக ரூபா 130,862 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தின் மூலம் குறித்த நியமத்தின் பிரகாரம் கற்கள் உற்பத்தி செய்வதற்கு முடியாமையின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 31,060 தொகைக்கு அது விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் சபைக்கு ரூபா 99,802 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) பெகோ இயந்திரம் மற்றும் டிபர் வாகனம் என்பன சபையின் நடவடிக்கைகளுக்காகவும் வெளி நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளைக் காண்பிக்கின்ற பதிவேடு மற்றும் சேவையில் ஈடுபட்டமை தொடர்பான ஓட்ட அட்டவணை என்பன ஒன்றுக்கொன்று இணங்காதிருந்தது. இந்த இயந்திரத்தை சேவையில் ஈடுபடுத்தியமை மற்றும் அவற்றின் மேற்பார்வை என்பன உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்ட காணிகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) 2008 ஆம் ஆண்டின் போது மெனிக்கொட குறுந்துவத்த காணியில் பொது வசதிகளுக்காக 118.65 பேர் அளவான காணி 2 கூறுகளாக சபைக்கு கையேற்கப்பட்டிருந்ததுடன் அந்த இரண்டு காணிக் கூறுகளிலும் 31 பேர்ச் காணிக் கூறு பொது வசதிகளுக்காக பொருத்தமற்ற நீர் நிறையும் இடமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. 87.65 பேர்ச் அளவான மற்றைய காணிக் கூறும் காணியில் ஒரு மூலையில் அமைந்திருந்ததுடன் அது வயலுக்கும் வாய்க்காலுக்கும் அடுத்தாற் போல் அமைந்திருந்தது.

(ii) மேற்கூறப்பட்ட காணி 2008 ஆம் ஆண்டின் போது கூறிடல் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு சபையின் பொதுப் பகுதி கையளிக்கப்பட்டிருந்த போதிலும், சபை அவ்வாறு கையேற்கப்பட்ட காணிப் பகுதிக்காக அவற்றை நில அளவை செய்து

எல்லை பிரித்து வேலியமைத்து சபையின் பொதுப் பகுதியாக பெயர்பலகை பொருத்தப்பட்டிருக்கவில்லை. அந்தக் காணி அனுமதியற்ற வகையில் கைப்பற்றப்பட்டமையால் மீண்டும் காணிக்கூறுகள் அளவிடை செய்யப்பட்டு 2015 செப்தெம்பர் 22 ஆந் திகதி ரூபா 56,700 தொகையை நிலஅளவைக் கட்டணமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(iii) சபைக்குரிய 08 பொதுக் காணிக் கூறுகளுக்குரிய விளையாட்டு மைதானம், பொதுக் கிணறு, மயான நிலங்கள் போன்றவற்றின் நில அளவைப் பிரித்து வேலியமைத்து சபைக்குரிய காணிப்பகுதியாக இனங்காணக்கூடிய வகையில் வேறுபடுத்தாமையினால் 2015 ஆம் ஆண்டின் போது அந்தக் காணியை மீண்டும் அளப்பதற்காக ரூபா 270,974 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(iv) கீழே விபரிக்கப்பட்ட காணிகள் சபையின் பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதும் வெளிநபர்களினால் அனுமதியற்ற வகையில் காணியில் ஒருபகுதி கைப்பற்றப்பட்டிருந்தது.

| காணியின் பெயர் | அமைவிடம் | காணியின் அளவு | விபரம் |
|---|---|---|---|
| போதரகம பார்க் | யட்டதொரயில் அமைந்துள்ள போதரகம பார்க் | 02 றூட் 5.30 பேர்ச் | பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்ட காணியின் அருகில் அமைந்துள்ள லொட் 79 இல் வசிப்பவரினால் அனுமதியற்ற வகையில் 06.36 பேர்ச் கைப்பற்றப்பட்டிருந்தது.<br>வெளியேற்றும் அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. |
| வெல்கந்தல கெட்டேலந்த | வெல்கந்தல | 02 ஏக்கர், 33 பேர்ச் | இந்தக் காணியின் அருகில் வசிப்பவரினால் அனுமதியற்ற வகையில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

(அ) 2006 சனவரி 26 ஆந் திகதிய தேசிய பெறுகைகள் முகவராண்மையின் சுற்றறிக்கை இலக்கம் 08 இல் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.9.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஏதாவது குறிப்பிடப்பட்ட காலத்தில் சங்கத்தினால் நிறைவேற்றப்படுகின்ற மொத்த ஒப்பந்தங்களின் எண்ணிக்கை மூன்றுக்கு குறைவாக இருக்கும் வகையில் சபை செயற்பட வேண்டியிருந்த போதிலும், 2015 ஆம் அண்டின் இறுதி 04 மாதங்களில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளை மீறி 2015 ஒக்தோபர் 26 முதல் நவம்பர் 27 வரையான ஒரு மாத காலப்பகுதியில் சங்கமொன்றினால் செயற்திட்டப் பெறுமதி ரூபா 3,498,100 தொகையாக 07 செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. 5.4.4(i) ஆம் பந்தியின் பிரகாரம் வேலை ஒப்பந்தங்களுக்காக செலுத்த முடியுமான முற்பணத் தொகை மதிப்பீட்டுப் பெறுமதியில் 20 சதவீத ஆன கூடியதன் கீழ் செயற்பட வேண்டியிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட எல்லையினை விஞ்சி 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,199,846 தொகையும் ரூபா 908,451 தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) பிரதேச செயலகத்தின் மேற்கு அறுண செயற்திட்டத்தின் கீழ் நிதியுதவி மூலம் ஒப்பந்த அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்பட்ட வலகெதற கொஸ்கஹதெனிய வீதி 2015 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அதில் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிப் பகுதியின் நீளம் (தார் இடப்பட்ட) 473.62 சதுர மீற்றராக இருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் இறுதிக் கொடுப்பனவு அறிக்கையில் 2014 திசெம்பர் 09 ஆந் திகதி பெறப்பட்ட அளவிடையின் பிரகாரம் நீள்ம் 704,50 சதுர மீற்றருக்காக கொடுப்பனவு செய்யப்பட்டமையால் ரூபா 65,339 தொகை மேலதிகமாகக் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மாகாண குறித்த அபிவிருத்தி மானியம் 2015 இன் கீழ் மண்டாகல கந்த வீதிக்கு கொங்கிரீட் இடும் மதிப்பீட்டின் பிரகாரம் நீளம் 102 மீற்றராகவும் அகலம் 2.5 மீற்றராகவும் இருந்ததுடன் 2015 ஒக்தோபர் 01 ஆந் திகதி இந்த செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்குரியதாக 2016 பெப்ரவரி 17 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது ஒரு சதுர மீற்றர் வீதம் 02 இடங்களில் சீமேந்துக் கலவை கழுவிச் செல்லப்பட்டு கொங்கிரீட் கல் வெளிப்பட்டிருந்ததுடன் நிர்மாணிக்கப்பட்ட வீதியின் நீளம் 6.5 மீற்றராகவும் அகலம் 1.40 மீற்றர் அளவிலும் கருங்கல் படையொன்று பரந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அந்த அளவிற்குரிய 9.1 சதுர மீற்றர் கொங்கிரீட் கலவையின் செலவினம் அதாவது ரூபா 14,858 தொகை இறுதிக் கொடுப்பனவுகளிலிருந்து கழிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறின்றி முழுமையான நீளம் மற்றும் அகலத்திற்கும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.4 யட்டதொலவத்த உள்ளக பட்மிண்ரன் விளையாட்டரங்கு மற்றும் உடற்பயிற்சிக் கூட நிர்மாணம்**

இந்த நிர்மாணத்திற்காக ரூபா 5,580,222 மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2015 ஒக்தோபர் 01 ஆந் திகதி நிர்மாணத்தின் பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளையாட்டரங்கிற்கு கதவுகளைப் பொருத்துவதற்காக ரூபா 1,073,150 தொகையும் சுவர்களின் மேலே நிலைகளை மூடுவதற்காக அமானோ தகரத்திற்காக ரூபா 7,068,391 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மேலும், உள்ளக பட்மிண்ரன் விளையாட்டரங்கு மற்றும் பார்வையாளர் கூட நிர்மாணம் ஒப்பந்தத்தின் அடிப்படையிலும், நேர் ஊழிய அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவை தனித்தனியாக காண்பிக்கும் வகையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இந்தக் கட்டிடங்களுக்காக ரோலர் கதவுகள் மற்றும் அமானோ தகரம் இட்டு மேவுகை செய்வதற்காக திறந்த கூறுவிலை கோரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரோலர் கதவுகள் மற்றும் அமானோ தகரம் இட்டு மேவுகை செய்யும் ஒப்பந்தத்திற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(உ) கட்டம் 1 இற்காக ரூபா 1,540,854 தொகையான மதிப்பீடொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மதிப்பீடு அங்கீகாரமின்றி ரூபா 1,936,590 இனால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிர்மாணத்தின் இறுதியில் அளவிடை செய்யப்பட்டு வேலைப் பூர்த்தி அறிக்கை தயாரிக்கப்படாதிருந்ததுடன் உரிய செயற்பாடுகள் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டமை தொழில்நுட்ப உத்தியோகத்தர் / வேலை அத்தியட்சகரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியனர் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு இருந்தது.

| | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | மிகை | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| பதவிநிலை | 3 | 3 | - | - |
| இரண்டாம் | 53 | 50 | - | 3 |
| கனிஷ்ட | 118 | 152* | 34 | - |
| அமைய /தற்காலிக (ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர்) | - | 1 | 1 | - |
| | 174 | 206 | 35 | 3 |

* 2014 திசெம்பர் 19 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இன் பிரகாரம் 180 நாட்கள் பூர்த்தியடைந்தமையால் நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கையில் உள்ளடங்கியுள்ளது. மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு தாமதமின்றி அறிக்கையிட்டு பதவியணியினரை நாளதுவரையாக்கிக் கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) பாதீடு தயாரித்தல்
(ஊ) மனித வள முகாமைத்துவம்